**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C.135/2014**

**Prosecution witness : எ.ம.சா.1 Date : 18.04.2024**

| | |
|---|---|
| Name : கோசலை | Taluk : மேட்டூர் |
| Husband Name : – | Calling : கூலி |
| Village : அம்பேத்கர் நகர் | Age : 65 |

**(A5 to A7 absent. Filed petition and allowed. others present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**5 முதல் 7 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5 முதல் 7 எதிர் மனுதாரர்கள் கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்துதான் கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான். கிரயம் வாங்குவதற்கு முன்பு சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என கிரயம் கேட்டுத்தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த சொத்தை கிரயம் கொடுக்கும்போது எனக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுக்க வேண்டிய நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். கிரயத்தின் போது முழுத்தொகையும் கொடுத்துதான் கிரயம் வாங்கினார் என்றால் கிரயத்திற்கு முன்பு ரூபாய் 2 இலட்சம் முன்தொகையாகவும், கிரயத்தன்று முழுத்தொகையும் கொடுத்தனர். பத்திரம் எழுதுபவரிடம் அவர்கள் தரப்பில் ஆவணங்களை அவர்கள் கொடுத்தார்கள் மற்றும் எங்கள் தரப்பில் ஆவணங்களை நாங்கள் கொடுத்தோம் என்றால் பொன்னுசாமியிடம் கொடுத்து அவர்தான் கொடுத்தார். கிரயத்தின்போது அடையாள ஆவணங்களை மட்டும்தான் பொன்னுசாமி கொடுத்தார் என்றும், மீதி ஆவணங்களை நான் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பத்திரம்

எழுதியன்று அப்பு உடனிருந்தார் என்றால் நான் பார்க்கவில்லை. பத்திரம் எழுதி நபரிடம் பேசினார் என்றால் இல்லை. பத்திரம் எழுதி, பதிவுசெய்ய எத்தனை நாட்கள் ஆனது என்றால் பத்திரம் எழுதுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஆவணம் கொடுத்தேன். அவர்களே தட்டச்சு செய்துக்கொண்டனர். நான் கொடுத்த ஆவணத்தின்படிதான் பத்திரம் தயார் செய்தனர் என்றால் பட்டா கொடுத்தேன். வழக்கு போட்டவுடன் பொன்னுசாமி ஆகியோர் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தனர் என்றால் சரிதான். நான் தான் வழக்கறிஞர் அறிவிப்பில் கையெழுத்து செய்து நான் தான் பெற்றேன் என்றால் சரிதான். ( **வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான ஒப்புகை அட்டை எண்ணிக்கை நான்கு எ.ம.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இந்த சொத்தை ஏற்கனவே கிரயம் செய்யும்போது தொகையை குறைவாக பெற்றுவிட்டேன் என்றுசொல்லி மேலும் தொகையை கேட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான், என் சகோதரர் அப்பு மீது தவறாக வழக்கு போட்டுள்ளேன் என்றுசொல்லி 5 முதல் 7 எதிரிகள் கேட்டனர் என்றால் அப்பு கேட்கவில்லை. 5 முதல் 7 எதிரிகள் கேட்டார்கள். தற்போது வரை உயிலின் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றால் தற்போது என்னிடம் தான் உள்ளது. 2011 ல் பத்திரம் செய்யும்போது பொன்னுசாமி வகையறாவிடம் ஒப்படைத்தேன் என்றும், மீண்டும் வீட்டு சம்மந்தமாக வழக்கு தாக்கல்செய்வதற்காக 2013, 8 வது மாதம் உயிலை திரும்ப பெற்றுக்கொண்டேன். நான் அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், அப்புவும் சேர்ந்து கொண்டுதான் உரிமையியல்வழக்கு தாக்கல்செய்தோம் என்றும், இந்த வழக்கும் கூட்டாக

தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அப்புவுடன் பேசுவது இல்லை. இந்த காட்டை விற்றதற்கு நான் அப்புவுக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். ரூபாய் 2 இலட்சம் பணம் கொடுத்தேன். அவருடைய மகன் வீரராஜனுக்கு ரூபாய் 50,000/- கொடுத்தேன். என்னுடைய மற்றொரு அண்ணனான வெங்கடாஜலத்தின் மகன் சசிக்குமாருக்கு ரூபாய் 50,000/- கொடுத்தேன். பொன்னுசாமி நிலம் வாங்கும்போது அப்புவிடம் கேட்டார்கள் என்றும், அப்போது அப்பு தங்களுக்கும் தொகை வேண்டும் எனக்கோரியதால் பணம் கொடுக்கப்பட்டு மீண்டும் நான் அந்ததொகையை பொன்னுசாமியிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. பொன்னுசாமி சொன்னதால்தான் தொகையை கொடுத்தேன். பொன்னுசாமி சொல்லிதான் நான் ரூபாய் 3 இலட்சம் கொடுத்தேன் என்று எனக்கு நஷ்டம் ஆகிவிட்டது, அந்த தொகையை பொன்னுசாமிதான் கொடுக்கவேண்டும் என்று நான் பொன்னுசாமியிடம் தொகையை கேட்டேன் என்றால் சரியல்ல. அதனால் பொன்னுசாமிக்கு எதிராக நானும் உடந்தையாக இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரய பத்திரத்தில் இந்த கிரய சொத்தின் பேரில் எந்தவித முன்வில்லங்க விவகாரங்களோ, நீதிமன்ற விவகாரங்களோ, கடன்களோ, பாத்திய குறைவுகளோ இன்றி, சர்வவில்லங்க சுத்தமாய் உள்ளது என நாங்கள் இதன்மூலம் உறுதியால் கூறுகிறோம் அப்படியின்றி பின்னாளில் ஏதேனும் முன்வில்லங்க விவகாரங்கள் இருந்து வெளிப்பட்டு இக்கிரய சொத்தை பாதிக்குமேயானால் அதற்கு நாங்களும், எங்களுடைய வாரிசு தாரர்களும் முன்னின்று வில்லங்க விவகாரங்களை தீர்த்து வைப்பத்தோடு, அதனால் தங்களுக்கு ஏற்படும் இழப்புகளை எங்களுடைய இதர அசையும், மற்றும் அசையா சொத்துக்களிலிருந்து ஈடுசெய்து கொடுக்கிறோம் என நாங்கள்

இதன் மூலம் கூறுகிறோம் என்று சொன்னால் நான் அவ்வாறு செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அவ்வாறு பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு துர்லாபம் அடைவதற்காக முன்னுக்கு முரணாக செயல்படுகிறேன் என்றும், என் சகோதரருடை குடும்பத்திற்கும், அப்புக்கும் ஆதரவாக தவறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொன்னுசாமி வகையறாவிடமிருந்து அதிக தொகை வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் என் சகோதரருடன் சேர்ந்து நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த வழக்கிலும், எந்த இடத்திலும் சொல்லாமல், தற்போது நிலமதிப்பு அதிகமாகியுள்ளதால் நாங்கள் உறவினர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து 5 முதல் 7 எதிர் மனுதாரர்களை ஏமாற்றும் நோக்கத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. இந்த வழக்கிற்கும், 5 முதல் 7 எதிர் மனுதாரர்களுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஓம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**